# இந்தியத் துணைத் தூதரகம்

## யாழ்ப்பாணம்

**ஊடக அறிக்கை**

இந்திய அரசியல் அமைப்பானது 1949ம் ஆண்டு நவம்பர் 26ம் திகதி அரசியல் அமைப்பு பேரவையால் உருவாக்கப்பட்டு 1950ம் ஆண்டு ஜனவரி 26ம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட நாளின் 70வது வருட நிறைவு தினத்தினை முன்னிட்டு யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது இன்று (26 நவம்பர் 2019) யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அமைந்துள்ள இந்தியா கோர்ணர் பகுதியில் புகைப்படக் கண்காட்சி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் தொடக்க உரையாற்றிய யாழ் இந்திய துணைத் தூதுவர் திரு பாலச்சந்திரன் அவர்கள் தனது உரையில் இந்திய அரசியல் அமைப்பின் முக்கிய அம்சங்கள் பற்றியும் அதனை வரைந்த முனைவர் B.R. அம்பேத்கர் அவர்களைப் பற்றியும் குறிப்பிட்டதுடன் அரசியல் அமைப்பின் முகவுரையினையும் (Preamble) அதில் சொல்லப்பட்ட அடிப்படை கடமைகளையும் வாசித்தார். நிகழ்வின் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் அவர்கள் புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்ததுடன் சிறப்புரையாற்றினார்.

யாழ் மாநகர சபை முதல்வர், கல்வியியலாளர்கள், ஊடக அங்கத்தவர்கள், நூலக அலுவலர்கள், தூதரக அதிகாரிகள் என 50ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டதுடன் புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டனர்.

பொது மக்கள் பொது நூலகம் திறந்துள்ள நேரத்தில் வருகை தந்து குறித்த கண்காட்சியினைப் பார்வையிட முடியும்.

***